செ.வெ.எண்.52 நாள்.21.12.2017.

திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மார்க்கெட் மனகாவலம் மருத்துவமனை சாலை, சீவலப்பேரி சாலை ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் மொகா தூய்மை மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை வீடு, வீடாக நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். கொசு புழு கண்டறியப்பட்ட நிறுவனங்களுக்கு அபாரதம் விதிக்க உத்தரவிட்டார்.

--------

திருநெல்வேலி மாநகராட்சி பாளையங்கோட்டை மார்க்கெட் மனகாவலம் மருத்துவமனை சாலை, சீவலப்பேரி சாலை ஆகிய பகுதிகளில் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.சந்தீப் நந்தூரி,இ.ஆ.ப., அவர்கள் இன்று (21.12.2017) மொகா தூய்மை மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை வீடு, வீடாகவும், நிறுவனங்களிலும் நேரில் சென்று பார்வையிட்டு, ஆய்வு செய்தார். கொசு புழு கண்டறியப்பட்ட திருநெல்வேலி அரசு போக்குவரத்துக் கழக திருநெல்வேலி மண்டல கூடு கட்டும் பிரிவு மேலாளர், சென்ட்மேரிஸ் டிம்பர் டிப்போ உரிமையாளர் உள்ளிட்டவைகளுக்கு அபராதம் விதிக்கவும், விளக்க கடிதம் அனுப்பிடவும் உத்தரவிட்டார். மாநகராட்சி மூலம் செய்யப்பட்டு வரும் மெகா துப்புரவு பணி மற்றும் கொசு ஒழிப்பு பணிகளை மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் ஆய்வு செய்தார்.

நீண்ட நாட்களாக பூட்டப்பட்டுள்ள வீடுகளின் உரிமையாளர்களுக்கு நோட்டீஸ் அனுப்பி, வீடுகளை திறந்து கொசு ஒழிப்பு பணிகளை மேற்கொள்ள வேண்டுமென உத்தரவிட்டார். தொடர்ந்து, வீடு மற்றும் நிறுவனங்கள் உள்ள பகுதிகளுக்கு சென்று குடிநீர் தொட்டிகள், டிரம்கள் உள்ளிட்டவைகள் சுத்தமாக பராமரிக்கப்பட்டுகிறதா என ஆய்வு செய்தார். கொசு ஒழிப்பு புகை மருந்து அனைத்து வீடுகளிலும் மற்றும் நிறுவனங்களிலும் அடிக்க வேண்டுமெனவும் உத்தரவிட்டார்.

ஆய்வின் போது, மாநகராட்சி நகர்நல அலுவலர் மரு.பொற்செல்வன், உதவி செயற்பொறியாளர் திரு.பாஸ்கரன், வட்டாட்சியர் திரு.தங்கராஜ், இளநிலை பொறியாளர் திரு.இசக்கி ரமேஷ், சுகாதார அலுவலர் திரு.சுப்பிரமணியன், சுகாதார ஆய்வாளர் திரு.இளங்கோ மற்றும் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி.